# மாந்தை மேற்கு பிரதேச சபை

## மன்னார் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 15 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 20 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆண்டிற்கான கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஜுலை 08 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, மாந்தை மேற்கு பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாந்தை மேற்கு பிரதேச சபையின் நிலைவரத்தையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்படடிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றில் ஒரு சொத்து பெறுமதி ரூபா 40,000 அதிகரித்து காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.2 கணக்காய்வுக்குச் சான்றுகள் இன்மை

கணக்காய்விற்குத் தேவையான தகவல்களும் சான்றுகளும் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 9,057,888 பெறுமதியுடைய 02 மீதிகளை கணக்காய்வின் போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

#### 1.3.3 இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள்** | | **இணக்கமின்மை** |
|---|---|---|
| | **1988 ஆம் ஆண்டின் பிரதேச சபை நிதி நிருவாக வருமானம்** | |
| (அ) | | |
| (i) | அத்தியாயம் IX விதி 180 | காசு களஞ்சியம் என்பவற்றிக்கு பொறுப்பான அலுவலரிடம் பிணைப்பணம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | அத்தியாயம் III விதி 81 | ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் காணிக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான முத்திரைத் தீர்மானங்கள் மற்றும் தீர்மானப் தண்டப்பணங்களின் மீளளிப்பு சம்பந்தமாக எடுக்க தவறியமை |
| (iii) | அத்தியாயம் VII விதி 153 | அரசிறை நிலுவை சம்பந்தமாக – 7 ஆம் படிவம் முறைப்படி பேணப்பட்டிருக்கவிலலை. |
| (iv) | அத்தியாயம் VII விதி 163 | பிரதேச சபை படிவம் இலக்கம் 19 யின் படி வருமான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | திறைசேரி சுற்றறிக்கை இலக்கம் IAI/2002/02 ஆம் 28 கார்த்திகை 2012 ஆம் திகதியிலிடப்பட்ட | கணணிகள் மற்றும் உதிரிப்பாகங்களுக்கு பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் வருமானத்திலும் கூடிய செலவின மிகையாக ரூபா 21,255,213 ஆக விளைந்திருப்பதுடன் இதற்கு நேரெதிரான முன்னைய ஆண்டின் செயற்பாடு செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 104,908 ஆகவும் விளைந்திருந்தது.

**2.2 நிதி முகாமைத்துவம்**

வரவுசெலவுத் திட்டம் சரியான முறையில் தயாரிக்கப்படாமையினால் செலவினங்களில் மிகையும் சேமிப்பும் வருமானங்களின் பற்றாக்குறையும் மேலதிகமும் ஏற்பட்டுள்ளது.

**2.3 வருமான நிர்வாகம்**

**2.3.1** மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் வருமான நிலுவை

பிரதேச சபையால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் திரண்ட நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாற ானது | 31 மார்கழி இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | (ரூபா) | (ரூபா) | (ரூபா) |
| (i) | வாடகைகள் | 2,745,000 | 2,122,656 | 8,500 |
| (ii) | உரிமங்கள் | 320,000 | 355,040 | - |
| (iii) | சேவைகளுக்கான கட்டணங்கள் | 2,575,360 | 2,027,781 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 1,961,893 | 1,187,520 | - |

**2.3.2 முத்திரைத் தீர்வை**

ரூபா 5,151,195 முத்திரைத் தீர்வைப் பட்டியல் காணிப் பதிவாளர் நாயகத்திடம் இருந்து பெறப்பட்டுள்ள போதிலும் அதனைப் பெற்றுக் கொள்வதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் முகாமைத்துவ நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிப் பிரமாணம் 571 இன் படி இனந் தெரியாத வைப்புகள் 02 வருடங்களிற்கு மேலாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது. விபரம் வருமாறு.

| **வைப்பு விபரம்** | **வைப்புத் திகதி** | **தொகை (ரூபா)** |
|---|---|---|
| இனந்தெரியாத வைப்புகள் | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்டவை | 2,169,703 |

(ஆ) ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பில் சில்லறைக் கடன் கொடுனர் கணக்கில் ரூபா 54,490 இனந் தெரியாத மீதியாகக் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தீர்வு செய்யப்படுவதற்கோ அல்லது இனங்காணப்படுவதற்கோ அல்லது வருமானத்தில் செலவு வைக்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்கள்

பதவியணியினர் கடன் நிலுவைகள் ரூபா 38,095 நீண்ட காலமாக அறவிடப்படாமல் உள்ளதுடன் இது தொடர்பாக நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சொத்து முகாமைத்துவம்

### செயற்பாடற்ற மற்றும் குறைவான பாவனையுள்ள பௌதீக இருப்புகள்

பிரதேச சபைக்குச் சொந்தமான பின்வரும் வாகனங்கள் மூன்று வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்படாமல் உள்ளது.

| **வாகன வகை** | **வாகன பதிவிலக்கம்** |
|---|---|
| ஹேன்ட் டிரக்டர் | இல்லை |
| ஹேன்ட் டிரக்டர் | இல்லை |
| மோட்டர் சைக்கிள் | NPJB-3378 |
| பிக் அப்- சிங்கில்கெப் | WPLG-9008 |
| டிராக்டர் | NPRB-4226 |
| டிரைலர் | NPRW-0269 |
| தண்ணீர் பௌசர்- டிரைலர் | NPRV-8659 |
| தண்ணீர் பௌசர்- டிரைலர் | NPRV-8660 |

## 2.5 உள்ளகக் கணக்காய்வு

பிரதேச சபை நடவடிக்கைகள் சம்பந்தமாக போதுமானளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும முறைமைகள் மற்றும் கடடுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வருமானச் சேகரிப்பு

(ஆ) நிலையான சொத்துக்கள்

(இ) கணக்கீடு

(ஈ) வாகனங்களின் பயன்பாடு

(உ) வரவு செலவுத்திட்டம்